**திண்டிவனம் நகராட்சி**

**அவசர கூட்டம்**

## முன்னிலை:—திருமதி. ஆர்.நிர்மலா., நகர மன்ற தலைவர்.

**21.10.2022 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகர மன்ற அவசர கூட்டப் பொருள் விபரம்.**

| பொருள். எண் | பொருள் விபரம் |
|---|---|
| 1. | **கடந்த மாதம் 28.09.2022ல் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்**<br>1. திண்டிவனம் நகராட்சியில் வருமானம் ஈட்டக்கூடிய இனங்களான சொத்துவரி, காலியிடவரி மற்றும் திடக்கழிவு கட்டணம் (SUC) மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.739.63 இலட்சமும், தொழில் வரியின் மூலம் ரூ.93.15 இலட்சமும், குடிநீர் கட்டணம் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50.70 லட்சமும், ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடைகள் மூலம் ரூ.43.75.00 லட்சம், ஆக மொத்தம் ரூ.927.23 இலட்சம் வருவாய் ஈட்டப்படுகிறது. இதனை தவிர்த்து அரசிடமிருந்து மாநில பகிர்மான நிதி, முத்திரைதாள் கட்டணம் மற்றும் 15வது நிதிக்குழுவின் மூலமும் இந்நகராட்சிக்கு வருமானம் வருகிறது.<br>2. மேற்படி வருமானத்தை வைத்து நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம், மின்கட்டணம், தெருவிளக்கு பராமரிப்பு, தூய்மை பணி மேற்கொள்ளும் தனியார் நிறுவன தூய்மை பணியாளர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்குதல், பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் கொள்முதல் செய்தல் மற்றும் இதர செலவினங்களுக்கு போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள போதிய நிதியாதாரம் இல்லாத நிலையில், பெரும்பாலான பணிகளுக்கு அரசிடமிருந்து மானியம் பெற்று வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே செய்யப்பட்ட பணிகளுக்கு அரசு துறைகளுக்கு கடன் செலுத்த வேண்டியுள்ளது.தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்கு நகராட்சி பங்களிப்பாக ரூ.39.09 கோடி செலத்த வேண்டியுள்ளது.<br>3. 1920—ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 328—வது பிரிவின்படியும், அரசாணை எண்.1216, உள்ளாட்சி துறை, நாள்.04.04.1938, அரசாணை எண்.1915, உள்ளாட்சி துறை நாள்.22.07.1971, விதி 3(4), அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.03.07.2007, அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.19.09.2008—ன் குத்தகை விதிகளின் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3507/2004/பி3, நாள்.09.09.2005 மற்றும் ந.க.எண்.43339/2006/பி3, நாள்.01.08.2006 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.43339/2006/பி3, நாள்.01.08.2006 ஆகியவற்றில் நகராட்சிகளுக்கு போதிய நிதி ஆதாரத்தை பெருக்கும் பொருட்டு, நகராட்சிக்கு சொந்தமான காலி இடங்களில் கடைகள், அங்காடிகள், பேருந்து நிலையம், |

திரையரங்குகள், கல்யாண மண்டபங்கள் மற்றும் வாகனம் நிறுத்துமிடங்கள் ஆகியவற்றினை கட்டிக்கொள்ளளாம் எனவும், அதற்கான நிதி ஆதாரத்தினை முன் ஏலம் (Pre-Auction) நடத்தி அதன் மூலம் முன் வைப்புத்தொகை (Deposit) மற்றும் முன் பணம் (Advance) பெற்று கட்டுமான பணியினை மேற்கொள்ளலாம் என உத்திரவிடப்பட்டுள்ளது.

4. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் மற்றும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, திண்டிவனம் நகரளவை ஆவணங்களில் திண்டிவனம் நகரம், 122, அவரப்பாக்கம், வார்டு–C, பிளாக்–18, T.S,No.21, பழைய சர்வே எண்.106/1C, செஞ்சி ரோடு என்ற இடத்தில் பேருந்து நிலையம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள, திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான 2500 சதுர மீட்டர்(62 செண்ட்) பரப்பளவு கொண்ட இடம் ஏற்கனவே பேருந்து நிலையமாக செயல்பட்டு வந்துள்ளது.

மேற்படி செஞ்சி பேருந்து நிலையம் பல ஆண்டுகளாக பேருந்துகள் ஏதும் உள்ளே வந்து செல்லாத நிலையில் உள்ளதால், அந்த இடத்தில் சில தனிநபர்கள் கடைகள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்தும், தனிநபர் வாகனங்கள் நிறுத்துமிடமாகவும், இரவு நேரங்களில் சமூக விரோத செயல்கள் நடைபெற்று வரும் இடமாகவும், மேலும் பொதுமக்கள் தீங்கு ஏற்படுத்தும் விதமாக சிறுநீர், மலம் கழித்தல் போன்ற செயல்களால் அசுத்தம் ஏற்பட்டும் வருகிறது.

5. திண்டிவனம் நகராட்சிக்கு வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, மேற்படி பயனற்ற நிலையில் உள்ள செஞ்சி பேருந்து நிலையத்தின் 61 செண்ட் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று, முன் ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி (Pre Auction / Pre Bid) மூலம் கடைகள் ஏலம் விட்டு, முன் வைப்புத் தொகை (Deposit) மற்றும் 12 மாத முன் பணம்(Advance) பெற்று அந்த தொகையினை கொண்டு தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய கடைகள் கட்டி அதன் மூலம் நகராட்சிக்கு வருமானத்தை அதிகரிக்கலாம்.

6. மேற்படி கடைகளுக்கு முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஏதுவாக கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கடைகளுக்கு மாத வாடகை நிர்ணயம் செய்திடும் பொருட்டு, சார் பதிவாளர் வழிகாட்டு மதிப்பீடு, பதிவுத்துறை அலுவலகத்திலிருந்து பெற்றும், பொதுப்பணித்துறை விலை விகிதாச்சார அடிப்படையிலும், செஞ்சி பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் கடைகளின் தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றை அளவீடு செய்து அக்கடைகளுக்கான மாத வாடகை (சந்தை மதிப்பு) எவ்வளவு வசூலிக்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்து மாத வடகை நிர்ணயம் செய்யலாம்.

மேலும் செஞ்சி பேருந்து நிலையத்தில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களுக்கு ஆக்கிரமிப்புகளை காலி செய்யும் பொருட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு, 182–ன் கீழ் அறிவிப்பு வழங்கி மேல்நடவடிக்கை நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 4654/அ1/2022

**தீர்மானம் எண்: 196.**

**இந்த மன்ற பொருளை திருத்தம் செய்து அடுத்த கூட்டத்தில் வைக்க அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **2.** | திண்டிவனம் நகராட்சி ஆணையாளர் அவர்களது செப்டம்பர் 2022 மாதத்திற்கான தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண். 3999/2022/சி1)<br>**தீர்மானம் எண்: 197.**<br>**பதிவு செய்யப்பட்டது,** |
| **3.** | மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 24-B-24-H மற்றும் மாநகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் படி, வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கான விதிகள், விதிகள் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.92 மற்றும் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.06.2022, மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:- 5123/2022/எப்1<br>**தீர்மானம் எண்: 198.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **4.** | திண்டிவனம் நகராட்சிக்கு உட்பட்ட நகர சார் அளவை பதிவேட்டில் திண்டிவனம் யூனியன் வேணுகோபால் பார்க் என பெயரிடப்பட்டுள்ள வார்டு B, பிளாக் எண்.21, T.S No.18 மற்றும் திண்டிவனம் கிராம சர்வே எண் 161/2ல் உள்ள இடத்தில் வரிவிதிப்பு எண்கள் 043/007/900026, 043/007/900027, 043/007/900028 திண்டிவனம் யூனியன் கிளப் என்ற பெயரிலும் மற்றும் வரிவிதிப்பு எண்கள் 043/007/900053, 043/007/900054 யூனைட்டெட் அசோசியேஷன் திண்டிவனம் என்ற பெயரிலும் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திண்டிவனம் யூனியன் வேணுகோபால் பார்க் அமைந்துள்ள இடத்தினை பூங்கா மற்றும் திறவிடங்கள் விளையாட்டு மைதானங்கள் பாதுகாப்பு முறைபடுத்துதல் சட்டம், 1959-ன் படி பாதுகாக்க வேண்டியுள்ளதாலும், மேற்படி பூங்காவினை அரசின் திட்ட நிதியின் மூலம் மேம்படுத்தி பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளதால், திண்டிவனம் யூனியன் கிளப் மற்றும் யூனைட்டெட் அசோசியேஷன் திண்டிவனம் என்ற பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள கட்டடங்கள் அமைந்துள்ள இடத்திற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய் துறையின் மூலம் பெறப்பட்ட பட்டா உள்ளிட்ட இதர ஆவணங்களை 7 தினங்களுக்குள் நகராட்சி அலுவலகத்தில் |

| | |
|---|---|
| | சமர்பிக்குமாறும், தவறும் பட்சத்தில் ஆவணங்கள் ஏதும் இல்லை என கருதி மேற்படி திண்டிவனம் யூனியன் கிளப் என்ற பெயரில் உள்ள வரிவிதிப்பு எண்கள் 043/007/900026, 043/007/900027, 043/007/900028 மற்றும் யூனைட்டெட் அசோசியேஷன் திண்டிவனம் என்ற பெயரில் உள்ள வரிவிதிப்பு எண்கள் 043/007/900053, 043/007/900054 ஆகியவற்றை ரத்து செய்யப்படும் என இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 4593/2022/ அ2. நாள். 22.09.2022ல் அறிவிப்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.<br>யூனியன் கிளப் திண்டிவனம், யுனைடெட் அசோசியேஷன் திண்டிவனம் மேற்படி சொத்து வரி விதிப்பு எண்களுக்கான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய் துறையின் மூலம் பெறப்பட்ட ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படாததால் இவ்வலுவலக கடிதம் ந.க.. எண். 4593/2022/அ2 நாள் 03.10.2022 அன்று 2வது நினைவூட்டு அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டது.<br>திரு.அ.கோதண்டம், வழக்கறிஞர் அவர்கள் மூலம் பெறப்பட்ட 14.10.2022 நாளிட்ட விளக்க கடிதத்தில், திண்டிவனம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நகர சார் அளவை பதிவேட்டில் திண்டிவனம் யூனியன் வேணுகோபால் பார்க் என தாக்கலாகியுள்ள வார்டு B, பிளாக் எண் 22, T.S.No.18 மற்றும் திண்டிவனம் கிராம சர்வே எண் 161/2ல் அடங்கியுள்ள இடம், திண்டிவனம் யூனியன் கிளப் மற்றும் யூனைடெட் அசோசியேஷன் திண்டிவனம் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான எவ்விதமான பதிவு செய்யப்பட்ட ஆவணமோ அல்லது வருவாய் துறையின் மூலம் பெறப்பட்ட ஆவணமோ சமர்ப்பிக்கபடாமல், அனுமானத்தின் அடிப்படையிலும், எவ்வித அடிப்படை ஆதாரம் ஏதுமின்றியும் விளக்கம் அளிக்கப்பட்டதால், அவற்றை ஏற்க இயலாது என தெரிவித்து இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 4593/2022/ அ2. நாள்.17.10.2022ல் இறுதி அறிவிப்பு அனுப்பப்பட்டது. இந்த இறுதி அறிவிப்பு கடிதம் கிடைக்கப் பெற்ற 24 மணி நேரத்திற்குள் திண்டிவனம் யூனியன் கிளப் மற்றும் யுனைடெட் அசோசியேஷன், திண்டிவனம் ஆகியோர் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மற்றும் வருவாய் துறையின் மூலம் பெறப்பட்ட சான்றொப்பமிட்ட ஆவணம் ஆகியவற்றுடன் உரிய விளக்கத்துடன் சமர்ப்பிக்குமாறும் தவறும் பட்சத்தில் எவ்வித ஆவணமும் இல்லை எனக் கருதி, இருக்கின்ற ஆவணங்களின் இறுதி விளக்கம் ஏதும் கோராமல் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.<br>ஆனால் யூனியன் கிளப் திண்டிவனம், யுனைடெட் அசோரியேஷன் திண்டிவனம் சார்பில் மேற்கண்ட சொத்துவரி எண்களுக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மற்றும் வருவாய் துறையின் மூலம் பெறப்பட்ட சான்றொப்பமிட்ட ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.<br>ஆகவே திண்டிவனம் நகராட்சிக்கு உட்பட்ட நகர சார் அளவை பதிவேட்டில் திண்டிவனம் யூனியன் வேணுகோபால் பார்க் என பெயரிடப்பட்டுள்ள |

வார்டு B, பிளாக் எண்.21, T.S No.18 மற்றும் திண்டிவனம் கிராம சர்வே எண் 161/2ல் உள்ள இடத்தில் வரிவிதிப்பு எண்கள் 043/007/900026, 043/007/900027, 043/007/900028 திண்டிவனம் யூனியன் கிளப் என்ற பெயரிலும் மற்றும் வரிவிதிப்பு எண்கள் 043/007/900053, 043/007/900054 யூனெட்டெட் அசோசியேஷன் திண்டிவனம் என்ற பெயரிலும் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள வரி விதிப்புகளை நீக்கம் செய்யவும், மேற்படி வரி விதிப்பு எண்களில் நிலுவையாக உள்ள கீழ்க்கண்ட சொத்து வரி தொகை ரூ. 29112/- வஜா செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரி விதிப்பு | கேட்பு நிலுவை விவரம் | கேட்புத் தொகை ரூ. | | |
|---|---|---|---|---|---|
| | | | சொத்து வரி | திடக்கழிவு பயன்பாட்டு கட்டணம் | மொத்த கேட்புத் தொகை |
| 1 | 043/007/900026 | 2002-2023 | 604 | 600 | 1204 |
| 2 | 043/007/900027 | 2015-2016 முதல் 2022-2023 வரை | 8424 | 3450 | 11874 |
| 3 | 043/007/900028 | 2019-2020 முதல் 2022-2023 வரை | 4334 | 2100 | 6434 |
| 4 | 043/007/900053 | 2021-2022 முதல் 2022-2023 வரை | 1800 | 1200 | 3000 |
| 5 | 043/007/900054 | 2018-2019 முதல் 2022-2023 வரை | 3600 | 3000 | 6600 |
| | | மொத்தம் | 18762 | 10350 | 29112 |

<u>அலுவலக குறிப்பு</u>

1) உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் திண்டிவனம் யூனியம் கிளப் என்ற பெயரில் உள்ள வரிவிதிப்பு எண்கள் 043/007/900026, 043/007/900027, 043/007/900028 ஆகியவற்றை ரத்து செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2) உரிய ஆவணங்கள் யூனெட்டெட் அசோசியேஷன் திண்டிவனம் என்ற பெயரில் உள்ள வரிவிதிப்பு எண்கள் 043/007/900053, 043/007/900054 ஆகியவற்றை ரத்து செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட வரி விதிப்பு எண்களுக்கான நிலுவைத் தொகை ரூ. 29112/- வஜா செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4593/2022/ அ2. )

**தீர்மானம் எண்: 199.**

**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 5. | திண்டிவனம் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகை பொருட்கள் விழுப்புரம் மாவட்டம் மொத்த கூட்டுறவு விற்பனை பண்டக சாலை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி விழுப்புரம் மாவட்டம் மொத்த கூட்டுறவு விற்பனை பண்டக சாலை மூலம் நகராட்சிக்கு விநியோகம் செய்யப்படும் மளிகை பொருட்கள் வெளிமார்க்கெட்டில் விற்பனையாகும் விலையினை விட 30% முதல் 40% கூடுதல் விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூபாய் 30,000/- வரை கூடுதல் செலவினம் நகராட்சிக்கு ஏற்பட்டு வருகிறது. எனவே, கூடுதல் செலவினத்தை தவிர்க்கும் பொருட்டு வெளி மார்க்கெட்டில் மொத்த விற்பனை அங்காடியில் மளிகை பொருட்கள் கொள்முதல் செய்யவும், மற்றும் காய்கறியினை இதுநாள் வரையில் தனிநபர் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வரும் நிலையில், தினசரி காய்கறி பட்டியல் தொகை சராசரி 1300/-க்கு குறையாமல் பட்டியல் தொகை வருகிறது, மேலும் காய்கறிகள் தரமில்லாமலும், அளவு குறைவாகவும் உள்ளதாக அம்மா உணவகம் நடத்தி வரும் மகளிர் சுய உதவி குழுவினர் புகார் தெரிவித்து வருகிறார்கள். ஆகவே மகளிர் குழுவின் மூலம் அவர்களாகவே தினசரி விற்பனையாகும் தொகையில் இருந்து நாளொன்றுக்கு ரூ.700/- என்ற அடிப்படையில் மொத்த விற்பனை காய்கறி கடைகள் மற்றும் உழவர் சந்தையில் கொள்முதல் செய்யவும், இதனால் நகராட்சிக்கு செலவினம் குறையும் என்பதால் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:-<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்: 4499/2014/எச்2)<br><br>**தீர்மானம் எண்: 200.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 6. | இந்நகராட்சியில் தமிழ் நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2022 - 2023ன் கீழ் நகர மன்ற தீர்மான எண் : 190 நாள் : 28.09.2022ல் பதிவு செய்யப்பட்டதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 24826/2022/SS2 நாள். 12.09.2022ல் மையப்படுத்தப்பட்ட விளம்பரத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு 29.09.2022 அன்று 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள் ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **பணியின் பெயர் : பின்வரும் தெருக்களில் தார் சாலை அமைத்தல்.** ப.உ.ச நகர் பிரதான சாலை43001S006), சுதாகர் நகர் )043001S009), காமராஜர் நகர் ) வது தெரு1043002S017), சுடுகாட்டு சாலை )043002S027), சுரதா நகர் (04003S031),பிள்ளையார்கோவில் தெரு ரோஷணை )043005S068), கல்பனா கண்ணன் நகர் வது 3 )தெரு043005S076), வண்ணன் குட்டைகாந்திநகர்)0430005S075),பசுவ த்தம்மன் கோவில் தெரு )043006RO28), கரியன் தெரு )043006SO87(, சரவணபிள்ளையார் கோவில் முதல் தெரு (043007R037), ஸ்கடர் நகர் )043007S102(, ஸ்கடர் நகர் )வது தெரு2043007S100), ஸ்ரீனிவாசன் தெரு )043009S115), ராமதாஸ் நகர் )043010S128),உதயம் நகர் வது குறுக்கு 1 )தெர043011R047), சேடன்குட்டை தெரு )043011S140), உதயம் நகர் 2வது குறுக்கு தெரு)043011R048(, ஒத்தவாடை தெரு (043014S227) கரியன் நகர்)043015S183), சின்ன வீர ராகவன் தெருவில் 043020R113), நரிகுரவர் காலனி043020S205), வார்டுஎண்).1,2,3,5,6,7,9,10, 11,14,15,20 **(சிப்பம்–1)** | 195.00 | டி.டீ.ஆர் & கோ | −0.01% மதிப்பீட்டு விலை விகிதத் தை விட குறைவு |
| | | | **எஸ்.ஆர்.வி** கன்ஸ்ரக்ச ன்ஸ் | 1.53% மதிப்பீட்டு விலை விகிதத் தை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு :–**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள எம்/எஸ். டி.டீ.ஆர் & கோ, திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 4414/இ1/2022

**தீர்மானம் எண்: 201.**

**பதிவு செய்யப்பட்டது.**

**7.** இந்நகராட்சியில் தமிழ் நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2022 – 2023ன் கீழ் நகர மன்ற தீர்மான எண் : 190 நாள் : 28.09.2022ல் பதிவு செய்யப்பட்டதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 24826/2022/SS2 நாள். 12.09.2022ல் மையப்படுத்தப்பட்ட விளம்பரத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு 29.09.2022 அன்று 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 2 | **பணியின் பெயர் : பின்வரும் தெருக்களில் தார் சாலை அமைத்தல்.** புது தெரு (043020R116), விவேகானந்தர் நகர் (043023S281), விவேகானந்தர் நகர் முதல் தெரு (043023R124), இந்திரா நகர் 4வது தெரு(043024S308), வல்லார் நகர் (043024S303), இந்திரா நகர் 2வது தெரு(043024S306), இந்திரா நகர் 9வது தெரு(043024S313), ஜெயபுரம் 4வது தெரு(043025R131), சின்னு தெரு(043025R142), கனகசபை தெரு (043026R143), ஜாய்ஸ் பென்னய்யா தெரு (043026R150), வள்ளலார் பிரதான தெரு(043028S374), சஞ்சீவிராயன் பேட்டை 2வது குறுக்குத் தெரு(043028S381), கம்பர் தெரு(043028S378), நடராஜன் நகர் 2வது தெரு(043030R180), ஈஸ்டன் தோப்பு 3வது தெரு (043031S432), செந்தமிழ் நகர் (043031S406), நடுத்தெரு பூத்தேரி (043031S437), வடக்கு தெரு பூத்தேரி (043031S440), JP நகர் 2வது தெரு (043033S478), வார்டு எண் (20,23,24, 25,26, 28,30,31,33). **(சிப்பம்–2)** | 192.00 | டி.டீ.ஆர் & கோ | –0.003% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | **எஸ்.ஆர்.வி கன்ஸ்ரக்சன்ஸ்** | 0.91% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு :–**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள எம்/எஸ். டி.டீ.ஆர் & கோ, திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 4414/இ1/2022

**தீர்மானம் எண்: 202.**

**பதிவு செய்யப்பட்டது.**

| | |
|---|---|
| 8. | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளில் அணைத்து மின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு அரசாணை (நிலை) எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை, நாள்.14.10.2022–ல் திண்டிவனம் நகராட்சியில் கணக்கெடுப்பு செய்யப்பட்ட குழல் விளக்குகள் 1561எண்ணிக்கைகள், சோடியும்ஆவி விளக்குகள் 264– எண்ணிக்கைகள், சி.எப்.எல். விளக்குகள் 168 எண்ணிக்கைகள், எம்.எச்.உயர்மின் விளக்குகள் 88 எண்ணிக்கைகள் மற்றும் டி5 விளக்குகள் 11 எண்ணிக்கைகள் ஆக மொத்தம் 2092 எண்ணிக்கைகளில் உள்ள மின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைக்கம் பணிக்கு ரூ.303.37 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்குரிய தொகையை தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து (TUFIDCO) கடனாக பெறவும், மேற்படி கடனை ஆறு வருட காலத்திற்குள் 5% வட்டியுடன் செலுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புதியதாக LED விளக்குகளை மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ளும் நிறுவனம் 10 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.<br><br>எனவே திண்டிவனம் நகராட்சியில் உள்ள 2092 மின் விளக்குகளை LED மின் விளக்குகளாக மாற்றி அமைக்கவும் அதற்குரிய தொகை ரூ.303.37 இலட்சம் கடனாக தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி நிறுவனம் மூலம் பெறவும் மேற்படி கடன் தொகையினை ஆறுவருடகாலத்திற்குள் 5% வட்டியுடன் செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.மேலும் அரசாணை (நிலை) எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை, நாள்.14.10.2022–ஐ மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br><br>1. திண்டிவனம் நகராட்சியில் உள்ள 2092 மின் விளக்குகளை LED மின் விளக்குகளாக மாற்றி அமைக்கவும் அதற்குரிய தொகை ரூ.303.37 இலட்சம் கடனாக தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள் கட்டமைப்பு |

| | |
|---|---|
| | வளர்ச்சி நிதி நிறுவனம் மூலம் பெறவும் மேற்படி கடன் தொகையினை ஆறுவருடகாலத்திற்குள் 5% வட்டியுடன் செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அரசாணை (நிலை) எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை, நாள்.14.10.2022–ஐ மன்றம் பதிவுசெய்யலாம்.<br>(ந.க.எண். /2022/இ2)<br>**தீர்மானம் எண்: 203.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **9.** | திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8, நகரளவை வார்டு–B, பிளாக் எண்.21, T.S.NO.18–ல் (பழைய சர்வே எண்.161/2) சம்மந்தப்பட்ட 3.62 ஏக்கர் பரப்புள்ள இடம் வேணுகோபால் பூங்கா என பதிவு செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி, இடத்தில் நகராட்சி நிர்வாகம் மூலம் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்திடும் வகையில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.186.68 லட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் மைய கட்டடம் கட்ட முற்படும் போது, அதனை ஆட்சேபித்து திண்டிவனம் யுனைடெட் அசோசியேசன் சார்பில் நகராட்சி ஆணையர் மற்றும் நகரமன்ற தலைவருக்கு எதிராக மேன்மைமிகு திண்டிவனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்படி வழக்கினை நகராட்சி ஆணையர் மற்றும் நகரமன்ற தலைவர் சார்பாக நடத்திட இவ்வழக்கிற்கு மட்டும் சிறப்பினமாக வழக்கறிஞர் திரு.கே.ஜி.கஜேந்திரவரதன், திண்டிவனம் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்திடவும் இது தொடர்பான வாதுரைகள், அறிக்கைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.4607/2022/எப்1**<br>**தீர்மானம் எண்: 204.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| **10.** | இந்நகராட்சியில் **குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி வருவாய் நிதி – 2022–2023ன் கீழ்** நகர மன்ற தீர்மான எண் : 180 நாள் : 28.09.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 07.10.2022 அன்று வரை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| **வ. எ ண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை** (ரூ இலட்சத்தில்) | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள் ளி சதவீதம்** |
|---|---|---|---|---|
| 1 | எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையினையொட்டி முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அய்யந்தோப்பு முதல் பெலாக்குப்பம் சாலை, வெள்ளவாரி வாய்க்கால், கிடங்கல் –II வாய்க்கால் மற்றும் இதர கால்வாயினை பொக்லின் மற்றும் JCB இயந்திரம் கொண்டு தூர்வாரவும், மழைக் காலங்களில் மழைநீரை வெளியேற்ற வாடகை ஜென்செட், மின் மோட்டார்கள் வாங்கவும், மணல் மூட்டைகள், சவுக்கு மரம் மற்றும் மழைக்காலங்களில் உணவு பொருட்கள் வாங்கவும் ஆகிய பணி | 9.80 | எம்/எஸ். டி.டீ.ஆர். & கோ திண்டிவனம் | –0.38 % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எம்/எஸ். பி.கே.பி கண்ஸ்ரக்சன் ஸ், திண்டிவனம் | 8.62% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள எம்/எஸ். டி.டீ.ஆர். & கோ, திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் : 3515/இ1/2022)**

**தீர்மானம் எண்: 205.**
**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **11.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளிலும் சுற்றிதிரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து ராபிஸ் தடுப்பூசி போடுதல் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் தொடர்ந்து மூன்று நாட்கள் மருத்துவ கவனிப்பில் வைத்து நாய்களை பிடித்த இடத்தில் கொண்டு விடுதல் போன்ற பணிகளை செய்ய 23.09.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது, அவற்றினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நாய் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | டாக்டர்.M.கோபிகண்ணன்,<br>கால்நடை அறுவை சிகிச்சை நிபுனர்,<br>பதிவு எண்.4257,<br>எண்.13, பிள்ளையார் கோவில் தெரு,<br>ஆவடி, சென்னை–600 054. | ரூ.725/– |
| 2 | N.சண்முகம்,<br>எண்.13, பகவத்சிங் தெரு,<br>கஸ்தூரி பாய் நகர்,<br>மேற்கு தாம்பரம். | ரூ.750/– |
| 3 | R.புருஷோத்தமன்,<br>அனிமல்ஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா,<br>எண்.17/34, பெருமாள் கோயில் விரிவாக்க தெரு,<br>மேற்கு சைதாப்பேட்டை,<br>சென்னை–600 015. | ரூ.675/– |

**அலுவலக குறிப்பு:–**

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3–ல் உள்ள R.புருஷோத்தமன்,அனிமல்ஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா, என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.6177/எச்1/2002)**

**தீர்மானம் எண்: 206.**

**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **12.** | மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 24–B–24–H மற்றும் மாநகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் படி, வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கும் விதிகள், அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.06.2022–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண்.93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.06.2022–ல் குழு செயலாளர் நியமிப்பது குறித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது மேற்படி, அரசாணையினை, தமிழ்நாடு அரசிதழ் |

எண்.358, நாள்.24.06.2022 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி, அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசிதழில் குறிப்பிட்டுள்ளவாறு திண்டிவனம் நகராட்சியில் 1 முதல் 33 வார்டுகளில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு வார்டினையும் 4 பகுதிகளாக பின்வருமாறு பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் எல்லைகள் உருவாக்கம் செய்து வரையறை செய்யப்பட்ட இறுதி பகுதிசபா பட்டியலுடன் முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, முன்மொழிவினை விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்று, மாவட்ட அரசிதழில் வெளியிடும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**NAME OF THE DISTRICT : VILLUPURAM**
**NAME OF THE ULB : TINDIVANAM**
**Vellore Region**
**Boundaries of Area Sabha**

| Sl. No. | Unique code for Area Sabhas | Area/ Streets of the Area Sabha | Area of Boundary | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 5 | |
| **WARD COMMITTEE 01** | | | | |
| 1 | 0101 | Santhaimedu ( Upto Rajagoapal Nagar), Rajagopal Nagar, Vanthavasi Road. | **North** | Ward 2 Boundary with Agriculture Land |
| | | | **East** | Agriculture Lands and Rajagopal Nagar |
| | | | **South** | Thiruvannamalai Bypass Road ends at Santhaimedu |
| | | | **West** | Municipal limit End. |
| 2 | 0102 | Gingee Road (Murugan Koil to Santhaimedu) , | **North** | Santhai medu |
| | | | **East** | Agriculture Lands |
| | | | **South** | TNSTREETC Godown |
| | | | **West** | Santhai medu ends at Gingee Road |
| 3 | 0103 | Thiruvalluvar Nagar , Kondrai Malar Street , Thazhampoo Street, Sudhakar Nagar | **North** | Municipal limit ends at Gingee Road |
| | | | **East** | Vanthavasi Road,Santhaimedu |
| | | | **South** | Thiruvalluvar Nagar |
| | | | **West** | Irudhayapuram |
| 4 | 0104 | Erudhayapuram | **North** | Thiruvannamalai Bypass Road. |
| | | | **East** | Vanthavasi Road |
| | | | **South** | Gingee Road |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | **West** | Municipal limit End. |
| | **WARD COMMITTEE 02** | | | | |
| | 5 | 0201 | Ayyanthoppu, Mariyamman Kovil Street | **North** | Thiruvannamalai Bypass ends at Burial Ground |
| | | | | **East** | Municipal Limit ends at Mariyamman koil lands |
| | | | | **South** | Mariyamman Koil Street |
| | | | | **West** | Agriculture Land and ward boundary 1 |
| | 6 | 0202 | MGR Nagar ,Murugan Kovil Street | **North** | Melpakkam Road ends at Odai |
| | | | | **East** | Melpakkam Road ends at Kamarajar Nagar |
| | | | | **South** | Kamarajar Nagar |
| | | | | **West** | Odai Street |
| | 7 | 0203 | Kamarajar Nagar 1,2,3,4 th Street | **North** | Murugan koil |
| | | | | **East** | Melpatkkam Road |
| | | | | **South** | odai Street |
| | | | | **West** | Odai Street |
| | 8 | 0204 | Pillayar Kovil Street | **North** | Mariyamman koil Street |
| | | | | **East** | Odai Street |
| | | | | **South** | Ward No.4 Boundary |
| | | | | **West** | Ward No.1 Boundary |
| | **WARD COMMITTEE 03** | | | | |
| | 9 | 0301 | Barathidasan Nagar, Suratha nagar, Alan Street, Natesan Nagar | **North** | Alan Street ends at Hopital Road |
| | | | | **East** | Suratha nagar ends at natesan nagar |
| | | | | **South** | Natesan nagar ends at collage road |
| | | | | **West** | Collage road ends at Ward No. 4 boundary |
| | 10 | 0302 | Vijalakshmi Nagar, Krishnammal Nagar, Ashok Nagar | **North** | Ward No. 1 boundary ends at Hospital Road |
| | | | | **East** | Hospital road |
| | | | | **South** | Sivasakthi Nagar cross Street |
| | | | | **West** | Ward No. 4 boundary and collage road |
| | 11 | 0303 | Marikulam Street, (Melpakkam Road) Chinnathoppu , Sivasakthi Nagar | **North** | Collage road ends at sivasakthi Nagar |
| | | | | **East** | Hospital road |
| | | | | **South** | Marikulam karai |
| | | | | **West** | Marikulam ends at kuttymani Street |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 12 | 0304 | Murungapakkam Eri, Kuttimani Nagar , Collage Road, Panchalam Road | **North** | Collage road ends at panchalam road |
| | | | | **East** | Murungapakkam eri |
| | | | | **South** | Hospital road |
| | | | | **West** | Collage Road |
| | **WARD COMMITTEE 04** | | | | |
| | 13 | 0401 | Mariyamman Koil 1,2,3,4,5,Street Mariyamman koil North Street, Mariyamman Koil Cross Street. | **North** | Kalaingnar Nagar Cross Street |
| | | | | **East** | Hospital road |
| | | | | **South** | Saravanapillayar koil Street |
| | | | | **West** | Murungapakkam eri |
| | 14 | 0402 | Bolan Street, Mariyamman Kovil Street, MC Muniyan Street | **North** | Mariyamman koil Street |
| | | | | **East** | Gandhi Street |
| | | | | **South** | Roshanai Hospital road |
| | | | | **West** | Roshanai pattai |
| | 15 | 0403 | Roshanai kuttai karai, Roshanai Hospital Road, | **North** | MC Muniyan Street |
| | | | | **East** | Bolan Street |
| | | | | **South** | Ward No 6 Boundary |
| | | | | **West** | Roshanai pattai |
| | 16 | 0404 | Roshanai Erikkarai Street, (Dhachinamoorthy Nagar) | **North** | Agriculture Land and Lake |
| | | | | **East** | Collage road |
| | | | | **South** | Vijiyalakshmi Nagar |
| | | | | **West** | Agriculture Land |
| | **WARD COMMITTEE 05** | | | | |
| | 17 | 0501 | Gingee Road (Market Kamity to Thiruvalluvar Nagar), Pillayar koil Cross Street, | **North** | Agriculture Land |
| | | | | **East** | Ward No 4 Boundary |
| | | | | **South** | Pillayar Koil Street |
| | | | | **West** | Gingee Road |
| | 18 | 0502 | Vajbai Nagar, Roshanai Road, Roshnai Gangaiamman Kovil Street | **North** | Gangai Amman koil Street |
| | | | | **East** | Roshanai Road |
| | | | | **South** | Market Committee |
| | | | | **West** | Gingee Road |
| | 19 | 0503 | Kalpana Kannan Nagar, Alli Malar Street, Sambangi Street | **North** | Vaigai Street |
| | | | | **East** | Gingee Road |
| | | | | **South** | Ward 14,15 Layout Road |
| | | | | **West** | Amman Nagar |
| | 20 | 0504 | Suriyagandhi Street, Mullai Street, Roja Street, | **North** | Ward No 1 Boundary |
| | | | | **East** | Gingee Road |
| | | | | **South** | Ward No 15 Boundary |
| | | | | **West** | Vasanthapuram Nagar Road |
| | | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **WARD COMMITTEE 06** | | | | |
| 21 | 0601 | Umarpulavar Street, Kariyan Street | **North** | Pasuvarthamman Koil Street |
| | | | **East** | Ward No 7 Boundary |
| | | | **South** | Anna Street |
| | | | **West** | Gingee Road |
| 22 | 0602 | Anna Street, Kamaraj Street, Roshanai Pattai | **North** | Umarpulavar Street |
| | | | **East** | Ward No 7 Boundary |
| | | | **South** | Ward No 14 Boundary |
| | | | **West** | Kariyan Street End. |
| 23 | 0603 | Gingee Road Part, Kadhar Ussain Street, Bangalakara Street, | **North** | Pallivasal Street |
| | | | **East** | Kariyan Street |
| | | | **South** | Ward No 14 Boundary |
| | | | **West** | Ward No 14 Boundary |
